www.malankaralibrary.com

மார் - மார்த்தா - மார்த்தாண்டத்துக்கு 25வயது

சூரியன் என அர்த்தம் கொண்ட மார்த்தாண்டன் என்ற பெயரிலிருந்து மார்த்தாண்டம் என்னும் இடப்பெயர் உருவானதாக பல்வேறு விளக்கங்கள் நாம் கூறக் கேட்டிருக்கின்றோம். இருப்பினும் மார்த்தாண்டம் என்ற சொல்லில் நம் மலங்கரை திருச்சபைச் சார்ந்த சில சொற்களும் அடங்கியிருப்பதை நாம் காண முடிகின்றது. குறிப்பாக மார், மார்த்தா, தாண்டவம் என்ற சொற்கள் மார்த்தாண்டம் என்னும் சொல்லுக்குள் அடங்கியிருக்கின்றன.

நமது சிறியன் மரபில் மிக முக்கியமான ஒரு சொல்லாக பயன்படுத்தப்பட்டு வருவது மார் என்ற ஒரு சொல்லாகும். மார் என்ற சொல்லானது இறைத்தன்மை கொண்ட, புனிதமான மற்றும் மதிப்புக்குரிய என்ற மூன்று அர்த்தங்களை கொள்கின்றது.

இந்த மார் என்ற சொல்லானது மலங்கரை மறைமாவட்டங்களுள் மார்த்தாண்டம் என்ற சொல்லில் மட்டுமே அடங்கியிருக்கிறது என்பதை எண்ணி நாம் பெருமை கொள்வோம்.

இரண்டாவது சொல்லாக மார்த்தா என்ற சொல்லானது அடங்கியிருக்கின்றது. மார்த்தா என்ற அரமேயச்சொல் தலைவி என்ற பொருள் கொண்டுள்ளது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் கிறிஸ்துவோடு நெருங்கிய உறவினராக கிறிஸ்துவுக்கு உறுதுணையாக இருந்த நபராக மார்த்தாவை நாம் விவிலியத்தில் வாசிக்கக் கேட்டிருக்கின்றோம். இப்புனிதையின் பெயரும் மார்த்தாண்டம் என்ற சொல்லுக்குள் அமைந்திருக்கின்றது.

மேலும் தாண்டவம் என்றால் இறைவன் மகிழ்ந்து இருக்கக்கூடிய மற்றும் நடனமாடும் நிலை ஆகும்.

இவ்வாறு இறைத்தன்மை கொண்ட புனிதமான அல்லது மதிப்புக்குரிய இடம் தான் மார்த்தாண்டம். இறைவனின் ஆன்மீக உணர்வு மறைவாக நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் நிலையைத் தான் மார்த்தாண்டம் என்ற ஒரு பெயரின் வழியாக நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இத்தகைய முக்கியத்துவம் பெற்ற மார்த்தாண்டம் பகுதியில் மேலும் இம்மண்ணுக்கு புனிதத்தை வாழ்ந்து காட்டிய மாமேதை ஆயர் மார் இலாறன்ஸ் மார் எஃப்ரேமின் 24 ஆம் நினைவுத் திருநாளை ஏப்ரல் “ úÃ.ÃÀ அன்று அவரது உடல் துயில் கொள்ளும் பேராலயத்தில் வைத்து கொண்டாடுகின்றோம்.

மறைபணியாற்றுவதற்காக 1932ஆம் ஆண்டு மார் இவானியோஸ் பேராயர் அவர்களின் ஆசியோடு மோன்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்கள் மார்த்தாண்டம் மண்ணில் காலடி எடுத்து வைத்தார். அருட்கன்னியர்களுக்கான மரியாவின் புதல்வியர் என்ற புதிய துறவற சமூகம் ஒன்றை உருவாக்கி மார்த்தாண்டம் பகுதியில் மறைபணித் தளங்களுக்கு துவக்கமிட்டார்.

www.malankaralibrary.com

இவ்வாறு களியக்காவிளை மற்றும் கொல்லங்கோடு மறைவட்ட பகுதிகளில் பிரான்சிஸ்கன் துறவு சமூகத்தினரைச் சார்ந்த அருட்சகோதரர்கள் மறைமணித்தளங்களை துவங்கி பின்னர் அச்சமூகத்தை மறைமாவட்டத்துக்கு ஒப்படைத்தனர்.

குலசேகரம் பகுதியில் அருட்தந்தை பிலிப் செம்பகசேரி மற்றும் முக்கம்பாலை இரப்பர் தோட்ட பொறுப்பைக் கொண்டிருந்த அருட்தந்தையர்கள் பல்வேறு மறைபணித் தளங்களை உருவாக்கினர்.

பனச்சமூடு சார்ந்த பல கேரள நிலப்பகுதிகளில் அருட்தந்தை பிலிப் உழுந்நல்லூர் பல மறைச்சமூகங்களை உருவாக்கினார். அவரால் துவங்கப்பட்ட பணித்தளம் இன்றும் நம்மிடையே உள்ளன.

நாகர்கோவில் பகுதியில் மிக முக்கியமான மறைபணி நிகழ்த்தியவர் நம் மறைமாவட்ட முதல் ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆவார். ஏழை மக்களிடையே இறைவனின் பணியை செய்வதற்காக துணிவோடு சென்று பல்வேறு துயர அனுபவங்களோடு நற்செய்திப் பணியை அவர் செயலாற்றினார். ஆங்காங்கு சிறு நிலப்பகுதிகளை வாங்கி மறைப்பணித் தளங்களை உருவாக்கினார். இதற்கு பெதனி மிசிகானுகரண துறவு அருட்சகோதரிகள் உறுதுணையாக செயல்பட்டனர்.

மேலும் பல்வேறு குருக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் மறைபணியாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் சீரிய பணிகளின் வாயிலாக பல்வேறு பணித்தளங்கள் ஆலய சமூகங்களாக உருவாக்கப்பட்டன.

Fr. Maria John